1982 பிப்ரவரி 18]

தொழுநோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கும் மருத்துவர்களுக்கு உதவித்தொகை வழங்கும் திட்டம்

*வினா எண் 253— திரு. செ. இராமலிங்கம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொழுநோயாளிகளுக்குசிகிச்சையளிக்கும் டாக்டர்கள் தனியாக பயிற்சி (Practice) செய்ய முடியாததால் அவர்கட்கு உதவித் தொகை (Non-pıacting allowance) வழங்கிடும் எண்ணம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்போதிருந்து அளிக்கப்படும்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) & (ஆ) தொழு நோய்மருத்துவ நிலையங்களில் பணிபுரியும் மருத்துவர் களுக்கு தனியாக பயிற்சி செய்யாமல் இருக்க ஈட்டுத் தொகை 1972 ஆம் ஆண்டிலிருந்து வழங்கப்பட்டு வருகிறது. எனவே இவ்வினா எழவில்லை.

திரு. செ. இராமலிங்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 'நான்-பிராக்டீசிங் அலவன்சு' உயர்த்திக்கொடுக்கப்படுமா? ஏனென்றால் தற்போது பல இடங்களில் தொழுநோய் மருத்து வர்கள் இடங்கள் காலியாக உள்ளன. ஆகவே இந்த அலவன்சு உயர்த்திக் கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு தலைவர்அவர் களே, 1972 ஆம் ஆண்டில் இந்த அலவன்சு 75 ரூ. என்று இருந்தது. 1977 ஆம் ஆண்டில் 100 ரூ. என்று உயர்த்தப்பட்டது. அதற்குப் பிறகு, 150 ரூ. உயர்த்தப்பட்டு இருக்கிறது. In addition to this they are paid a sum of Rs. 200/- as Special Leprosy Allowance. ஆகவே, இந்த அளவிற்கு நாம் செய்து இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. செ. இராமலிங்கம்: தலைவர் அவர்களே, தற்போது கும்பகோணம், திருவிடைமருதூர் வட்டங்களில் உள்ள தொழுநோய் மருத்துவப்பகுதிக்கு ஒரு பார மெடிகல் ஒர்க்கர் தான் இருக்கிறார். அந்த இரண்டு ஒன்றியங்களுக்கும் சேர்த்து ஒருவர் தான் இருக்கிறார். ஆகவே, குறைந்தபட்சம் ஒரு ஒன்றியத்திற்கு ஒரு பாரா மெடிகல் ஒர்க்கர் நியமிக்க அரசு முன்வருமா? அடுத்து, கும்பகோணம் இந்து மிஷன் அந்தப் பணியைச் செய்து வருகிறது. அவர்கள் உள்ளிருப்பு நோயாளிகளுக்கான வசதி செய்ய கட்டிடம் கட்ட வேண்டும் என்று விண்ணப்பித்து இருக் கிறார்கள். அதற்கு பண உதவி செய்ய அரசு முன் வருமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, கும்பகோணம் இந்து மிஷன் பற்றி நான் ஏற்கனவே கும்பகோணம் சட்டமன்ற உறுப்பினர் கேட்ட கேள்விக்கு பதில் அளிக்கின்ற நேரத்தில் சொல்லியிருக்கிறேன். அதைப் பரிட் சார்த்தமாக எடுத்துக்கொள்கிறோம் என்று அதை அவர்கள்

எடுத்துக்கொண்டு இருக்கிறார்கள். அவர்களுக்கு உதவி செய்வதில் முதலில் சிக்கல்கள் இருந்தன. இப்போது அது நீக்கப்பட்டு, அவர்களுக்குத் தொடர்ந்து உதவிகள் செய்யப்பட்டு வருகின்றன. அவர்கள் கட்டிட வசதி இன்னும் சில வசதிகள் செய்வதற்கு உதவிகள் செய்ய வேண்டும் என்று கேட்டு இருக்கிறார்கள். நிச்சயமாக அது ஆராயப்படும். பாரா மெடிகல் ஓர்க்கர்ஸ் இன்கிரிஸ் செய்வது குறித்து கருத்து சொல்லப்பட்டு இருக்கிறது. அது நல்ல கருத்து.

இன்னொரு கேள்வியையும் எழுப்பியிருக்கிறார்கள். டாக்டர்கள் இல்லாமல் பல இடங்களில் இடம் காலியாக இருக்கிறது என்று சொன்னார்கள். ஏற்கெனவே 104 இடங்கள் இருந்ததில் இப்போது 88 இடங்களில் மெடிக்கல் ஆபீசர்ஸ் இருக்கிறார்கள். ஆகவே, படிப்படியாக காலி இடங்களை நிரப்பிக் கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

திரு. சு. பாலன்: தலைவரவர்களே, தொழுநோயாளிகளுக்கு பல இடங்களில் டாக்டர்கள் சிகிச்சை அளித்து வருகிறார்கள். இது அவர்களுடைய சமூகப் பணி, மனிதாபிமான பணி, கருணை உள்ளத்தோடு செய்கிற பணியாக இருக்கிறது. இதற்கு அநேக மாக டாக்டர்கள் வருவதில்லை. ஆகையால் இந்த சிகிச்சை செய்கிற டாக்டர்களுக்கு அலவன்ஸ் கொடுப்பதாகச் சொன் னார்கள். காந்தியடிகள் கூட தொழுநோயாளிகளுக்கு சிகிச்சை அளித்திருக்கிறார்கள் கருணை உள்ளத்தோடு. ஆகையால் இப்படிப்பட்ட டாக்டர்களுக்கு அவர்களை ஊக்குவிக்கும் வகையில் மகாத்மா காந்தி பிறந்த நாளில் தங்கப்பதக்கம் அல்லது ஏதாவது சிறப்புப் பரிசுகள் கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவரவர்களே, அந்த மாதிரி இல்லாமல் இப்போது முன்னைவிட நிலைமை மாறியிருக் கிறது. தொழுநோய் சிகிச்சையை டாக்டர்கள் ஆர்வமாகச் செய்கிறார்கள். அவர்கள் ஆர்வத்தை அதிகப்படுத்த மாவட்டந்தோறும் 'கரம்படிஷன்' வைத்திருக்கிறோம். அது மட்டுமல்ல, அண்மையில் செங்கற்பட்டு மாவட்டத்தில் ஒரு கிராஷ் புரோகிராம் வைத்திருக்கிறோம்; பைலட் ஸ்கீம் அங்கே ஆரம்பத்திருக்கிறோம். ஆகவே, முன்பு இருந்த நிலைமை மாறி, டாக்டர்கள் ஆர்வமாக கவனம் செலுத்துகிறார்கள். உறுப்பினர் அவர்கள் கூறும் யோசனை அருமையான யோசனை.

THIRU T. VENKATA REDDY; Hon. Speaker Sir, Though many Leprosy Centres are available in the State, we find many lepers wandering in the Streets of Madras City. What steps the Government have taken to remove them from the streets and to place them in the Leprosy Centres?

1982 பிப்ரவரி 18]

Hon. Dr. H.V. HANDE: Hon. Speaker Sir only recently we had a meeting with the Leprosy patients in the City of Madras. They are a well organised sector. During the course of our discussion the main problem they posed before us was that the moment they are transfe red to Hospitals no one takes care of them.

திரு. மு. அம்பிகாபதி: சார், பாயின்ட் ஆஃப் ஆர்டர். இது தமிழ்நாடா, அல்லது இந்தியாவின் வேறு ஏதாவது ஒரு மாநிலமா? இங்கே ஆங்கிலத்திலேயே பேசிக் கொண்டிருக் கிறார்கள், எங்களுக்குப் புரியவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களுக்கு ஆங்கிலம் தெரியும். இதில் பாயின்ட் ஆஃப் ஆர்டர் இல்லை.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவரவர்களே, கேள்வி ஆங்கிலத்தில் இருந்ததால் அவர்களுக்காக ஆங்கிலத்தில் பதில் சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூட 'பாயின்ட் ஆஃப் ஆர்டர்' என்று ஆங்கிலத்திலேதான் சொன் னார்கள் (சிரிப்பு). அவர்கள் ஒழுங்குப் பிரச்சினை என்று தமிழிலே சொல்லியிருக்க வேண்டும்.

நான் சொல்ல வந்ததெல்லாம், இப்படி இருக்கிற குழந்தை களை என்ன செய்வது என்ற பிரச்சனை எழுந்தது. 'ட்ரான்சிட் கேம்ப்' என்று ஏற்படுத்தி, இந்த நோயால் பாதிக்கப்பட்டவர் களை, நாம வற்புறுத்தாமல் அவர்கள் விருப்பப்படியே அங்கே வரச்செய்து, சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்திருக்கிறோம். குழந்தைகளுக்கு கூட மாற்றுத் திட்டங்களை நாம் எடுத்துக் கொள்ள வேண்டும். அதையும் பரிசீலனை செய்கிறோம். இதிலே வெற்றி பெற்றால் சென்னை மாநகரில் தொழுநோய் பிரச்ச னைக்கு தீர்வு பெற முடியும் என்று கருதுகிறேன்.

ஆட்டோ ரிக்ஷா மற்றும் டாக்சிகளுக்கான கட்டணங்கள்

*வினா எண் 254— திரு. கு. ரமணி: மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) பெட்ரோல், டீசல் விலைகளை மத்திய அரசு உயர்த்தி யுள்ளதால் ஆட்டோரிக்ஷா, டாக்சிகளுக்கு கட்டண உயர்வு கொடுக்க அரசு தீர்மானித்து உள்ளதா?

(ஆ) ஆம் எனில் கட்டண உயர்வின் அளவு என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ) அண்மையில் ஏற்பட்ட பெட்ரோல் விலை உயர்வின் காரணமாக 9-12-81 நாளிட்ட உள்துறை அரசாணை எண். (பல்வகை) 2939-ல் ஆட்டோ ரிக்ஷா மற்றும் டாக்சி கட்டணங்கள் உயர்த்தப்பட்டுள்ளது.

(ஆ) ஆட்டோ ரிக்ஷாவின் ஒரு கிலோ மீட்டருக்கான கட்டணம் 0.80 காசிலிருந்து 0.90 காசாக உயர்த்தப்பட்டுள்ளது. டாக்சியில் ஒரு கிலோ மீட்டருக்கான கட்டணம் ரூ. 1.50-லிருந்து ரூ. 1.70 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. குறைந்தபட்ச கட்டணங் களில் மாறுதல் இல்லை.